<u>செய்தி வெளியீடு எண்.299</u> <u>நாள். **10.6.2009**</u>

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டத் தொடக்க விழா – 11.6.2009 காலை 9.30 மணி – சென்னை பொதிகை தொலைக்காட்சி மற்றும் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி மூலம் நேரடி ஒளிபரப்பு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நாளை (11.6.2009) காலை 9.30 மணியளவில் தலைமைச் செயலகத்திலிருந்து மின் ஊடக தொலைத்தொடர்பு (VIDEO CONFERENCING) மூலம் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தினைத் தொடக்கி வைக்கிறார்கள். இராமநாதபுரத்தில் நடைபெறும் விழாவில், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று அரசு நலத்திட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்கள்.

இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் குடிநீர் வசதியை ஏற்படுத்தும் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 30.1.2007 அன்று இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி, ராஜா சேதுபதி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டம் ரூபாய் 616 கோடி மதிப்பில், 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 18 ஊராட்சி ஒன்றியங்கள், 3163 ஊரக குடியிருப்புகளில் உள்ள மொத்தம் 20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் இரண்டு ஆண்டுகள் ஐந்து மாதங்களில் முடிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சி சென்னை பொதிகை தொலைக்காட்சி மற்றும் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.